வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1982 /ஆ2/2026 நாள்: .06.2026

பொருள்: பள்ளிக் கல்வி-விளையாட்டுப் போட்டிகள்-2026-27 ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவி பெறும்/மெட்ரிக்/சுயநிதி பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு அனைத்து வகையான விளையாட்டுப் போட்டிகள்- வட்டாரம்/குறுவட்டம் மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்துதல்-சார்பு.

பார்வை: சென்னை-06, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை ந.க.எண்031407/எம்2/இ2/2026 நாள்: 09.06.2026

-----------

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டம் 2026-27 ஆம் கல்வியாண்டில், பள்ளி கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு/அரசு உதவி பெறும்/மெட்ரிக்/சுயநிதி நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 3ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் U11/U14/U17/U19 வயது பிரிவில் உள்ள மாணவ/மாணவியர்களுக்கு அனைத்து வகையான விளையாட்டுப் போட்டிகள் குறுவட்டம் மற்றும் வருவாய் மாவட்ட குடியரசு தின/பாரதியார் தின குழு போட்டிகள், தடகளம் மற்றும் புதிய விளையாட்டுப் போட்டிகளை கீழ்வரும் அறிவுரைகளையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றி நடத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>குறுவட்டத்தில் உள்ளடங்கிய ஒன்றியம் மற்றும் மையங்களின் விவரம் கீழ்கண்டவாறு</u>

| வ எண் | குறுவட்டத்தின் பெயர் | ஒன்றியத்தின் பெயர் | மையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 01 | அணைக்கட்டு | அணைக்கட்டு , கணியம்பாடி | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி பொய்கை |
| 02 | வேலூர் | வேலூர் நகர் , வேலூர் புறநகர் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஊசூர் |
| 03 | காட்பாடி | காட்பாடி | க்ளுனி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி காட்பாடி |
| 04 | குடியாத்தம் | கே.வி.குப்பம் , குடியாத்தம் | திருவள்ளுவர் நிதியுதவி மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம். |

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 05 | பேர்ணாம்பட்டு | குடியாத்தம் , பேர்ணாம்பட்டு | லலிதா கோவிந்தம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி உள்ளி |

சதுரங்கப்போட்டிகளுக்கான ஒன்றியம் மற்றும் மையங்களின் விவரம் கீழ்கண்டவாறு

| வ எண் | குறுவட்டத்தின் பெயர் | ஒன்றியத்தின் பெயர் | மையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 01 | அணைக்கட்டு | அணைக்கட்டு , | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி பொய்கை |
| 02 | அணைக்கட்டு | கணியம்பாடி | அரசு மேல்நிலைப்பள்ளி விருபாட்சிபுரம் |
| 03 | வேலூர் | வேலூர் நகர் | அரசு நகரவை உயர்நிலைப்பள்ளி சலவன்பேட்டை |
| 04 | வேலூர் | வேலூர் புறநகர் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஊசூர் |
| 05 | காட்பாடி | காட்பாடி | க்ளூனி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி காட்பாடி |
| 06 | குடியாத்தம் | கே.வி.குப்பம் , | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கே.வி குப்பம் |
| 07 | குடியாத்தம் | குடியாத்தம் | திருவள்ளுவர் நிதியுதவி மேல்நிலைப் பள்ளி, குடியாத்தம். |
| 08 | பேர்ணாம்பட்டு | பேர்ணாம்பட்டு | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி பேர்ணாம்பட்டு |

## குறுவட்ட போட்டிகள்

அனைத்து பழைய விளையாட்டுகள் ( டென்னிஸ் நீங்களாக) , தடகளம் , கடற்கரை கையுந்து பந்து , கேரம் , வளையப்பந்து சிலம்பம், டேக்வாண்டோ ,குத்துச்சண்டை மற்றும் சதுரங்க போட்டிகள் குறுவட்ட அளவில் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட குறுவட்ட மையங்களின் தலைமையாசிரியர்கள் 31.07.2026–ஆம் தேதிக்குள் குறுவட்ட போட்டிகளை நடத்தி முடித்து, வெற்றி பெற்றவர்களின் விவரத்தினை மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரிடம் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Scanned with OKEN Scanner

2026–2027 ஆம் கல்வி ஆண்டில் மாணவ/மாணவர்களின் வயது மற்றும் பிரிவு.

அனைத்து நிலை RDG , RDS , BDS போட்டிகள்.

U–11 3முதல்5ஆம் வகுப்பு வரை (01–01–2016)

U–14 6முதல்9ஆம் வகுப்பு வரை (01–01–2013)

U–17 6முதல்12ஆம்வகுப்பு வரை (01–01–2010)

U–19 6முதல்12ஆம் வகுப்பு (01–01–2008)

அனைத்து நிலை SGFI–ஐ விளையாட்டு போட்டிகள்

U – 14 (01–01–2013)

U – 17 (01–01–2010)

U – 19 (01–01–2008)

வகுப்பின் நிலை தேவையில்லை.

ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் ஒரு பழைய விளையாட்டுப் போட்டி , ஒரு புதிய விளையாட்டுப் போட்டி, ஏதேனும் மூன்று தடகளப் போட்டிகள் மற்றும் இரண்டு தொடரோட்டப் போட்டிகளில் ஒரு கல்வியாண்டில் பங்குபெறலாம்.

ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் தான் அனைத்து RDG , BDG , RDS போட்டிகளிலும் பங்கு பெறுதல் வேண்டும்.

அனைத்து எடை பிரிவு போட்டிகளிலும் நுழைவுப் படிவத்தில் உள்ளவாறு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

குறுவட்ட அளவில் வெற்றி பெற்ற அணியினர் மாவட்ட அளவிலான போட்டியில் பங்குபெற அனுமதிக்கப்படுவார்கள்.

குறுவட்ட அளவில் தடகளப்போட்டியில் முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணாக்கர்கள் மாவட்டங்களில் நடைபெறும் போட்டிக்கு தகுதிபெறுவார். மேலும் தொடர் ஓட்டப் போட்டியில் முதலிடம் பிடித்தவர் மட்டும் மாவட்டப் போட்டியில் அனுமதிக்கப்படுவார்கள்.

ஒரு போட்டியில் ஒரு மாணவர் அல்லது ஒரு அணி மட்டுமே பங்கு பெறும் போது அவகளுக்கு பதக்கமோ சான்றிதழோ வழங்கப்படமாட்டாது.

## மாவட்ட அளவிலான போட்டிகள்

மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் அனைத்து புதிய மற்றும் பழைய விளையாட்டுப் போட்டிகளையும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் மூலமாக குழு அமைத்து நடத்தி முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான போட்டிகள் அனைத்தும் உரிய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடத்தி முடித்திட அறிவுறுத்தப்படுகிறது. அனைத்து வகையான பழைய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தடகள போட்டிகளில் குறுவட்ட அளவில் வெற்றி பெற்றவர்கள் வருவாய் மாவட்ட போட்டிகளில் பங்குபெறுவார்கள்.

Scanned with OKEN Scanner

புதிய வகையான விளையாட்டுகள் நீச்சல், ஸ்குவாஷ், வாள்சண்டை, ஜிம்னாஸ்டிஸ், ஜீடோ, சாலைமிதிவண்டி, போன்ற போட்டிகள் நேரடியாக வருவாய் மாவட்ட அளவில் நடத்தப்படும்.

ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் ஒரு பழைய விளையாட்டு போட்டியிலும் மற்றும் ஒரு புதிய விளையாட்டுப் போட்டியிலும் தடகளப் போட்டியிலும் பங்குபெறலாம். ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் தான் அனைத்து போட்டிகளிலும் பங்குபெற வேண்டும்.

குறிப்பு: மேற்கண்ட வட்டத்தைச் சார்ந்த அனைத்து வகை பள்ளிகளின் உடற்கல்வி இயக்குநர்கள் நிலை–I & II மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் வட்ட செயலாளரின் அறிவுரையின் படி ஆலோசனைக் கூட்டத்தில் வட்ட செயலாளர்கள் (தலைமையாசிரியர்கள்) குறிப்பிடுகின்ற நாட்களில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. விளையாட்டு போட்டிகளின் அட்டவணை.
2. போட்டி நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறை.
3. SOP– நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்.

16.6.26

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

16/6/26

**பெறுநர்**

அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்.

**நகல்**

1. மாவட்டக் கல்வி அலுவலர்
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர்
   (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது)
2. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்
   வேலூர்
   (தொடர் நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது)

Scanned with OKEN Scanner